# ஈராக்



## வரலாறும் அரசியலும்

கலையரசன்

# ஈராக்:
# வரலாறும் அரசியலும்

கலையரசன்

கீழைக்காற்று வெளியீட்டகம்
சென்னை - 2

*ஈராக்: வரலாறும் அரசியலும் - கலையரசன்*

♦ **முதற்பதிப்பு :** நவம்பர் 2010 ♦ **வெளியீடு:** கீழைக்காற்று, 10, அவுலியா தெரு, எல்லீசு சாலை, சென்னை - 600002. **தொலைபேசி:** 044-28412367 ♦ **அச்சு:** எழில் பிரிண்ட்ஸ், சென்னை - 600024, தொலைபேசி: 9445767603 ♦ **நூல் பற்றிய விமர்சனங்களுக்கு:** kalaiy26@gmail.com

விலை:
ரூ. **15.00**

## எமது பிற வெளியீடுகள்

- ❑ அருந்ததி ராய் / கரண் தபார் : விவாதம் – 10.00
- ❑ தமிழகத்தில் ஆர்.எஸ்.எஸ். வளர்ந்தது எப்படி? – 20.00
- ❑ கம்யூனிசக் கொடியின் கீழ்... – 7.00
  — ஜூலியஸ் ஃபூசிக்
- ❑ கார்ல் மார்க்ஸ், பிரடெரிக் எங்கெல்ஸ் வாழ்க்கை, செயல்களைக் காட்டும் முக்கிய நாட்குறிப்புகள் – 40.00

## 1

# ஊர்-இலிருந்து, ஈராக் வரை...

ஐரோப்பியர்கள் நாகரீகமடைவதற்கு முன்னர் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரே, ஈராக்கியர்கள் நாகரீகமடைந்த மக்களாக வாழ்ந்துள்ளனர். அதனை நிரூபிக்கின்றன ஈராக்கின் புராதன நகரங்கள். இன்று ஈராக் என அறியப்படும் நாடு, கிரேக்கர்களால் ''மெசொப்பொத்தாமியா'' (இரு நதிகளுக்கு இடைப்பட்ட தேசம்) என்ற பெயரால் அழைக்கப்பட்டது. எனினும் அந்தப் பகுதிக்கு கிரேக்கர்கள் வருவதற்கு முன்னமே, அதாவது இன்றைக்கு 6000 வருடங்களுக்கு முன்பு, ''சுமேரியர்கள்'' என்ற பண்டைய நாகரிக சிறப்புமிக்க மக்கள் அங்கே அரசமைத்திருந்தனர். அந்த சுமேரியர் நாட்டின் தலைநகர் ''ஊர்'' என அழைக்கப்பட்டது. அதிலிருந்து சிறிது தொலைவில் ''உருக்'' என்ற நகரம் இருந்தது. இதனை பைபிள், ''எரேக்'' என்று குறிப்பிடுகின்றது. அதிலிருந்து தான் ஈராக் என்ற தற்கால பெயர் வந்திருக்க வேண்டும்.

சுமேரியத் தலைநகர் ஊரில் இருந்துதான் யூத, கிறிஸ்தவ, இசுலாமிய மும்மதத்தவருக்கும் பொதுவான தீர்க்கதரிசி ஆப்பிரஹாம் வந்தார். தமது மொழிக்கென எழுத்து வடிவத்தைக் கொண்டிருந்த சுமேரியர்கள் களிமண் தட்டுக்களில் இலக்கியங்களை எழுதி வைத்துள்ளனர். அகழ்வாராய்ச்சிக் கண்டுபிடிப்புகளின்படி, விவிலிய நூலில் ஆதியாகமம் பகுதியில் வரும் பல கதைகள் இந்த சுமேரிய மண் தட்டுகளில் எழுதப்பட்டுள்ளன. (ஆனால் கதைகளில் வரும் பாத்திரங்களின் பெயர்கள் மாறியுள்ளன). சுமேரிய நாகரீகம் ஈராக்கின் தென்பகுதி

யில் வளர்ந்து வந்தது. அதேகால கட்டத்தில் வட ஈராக்கில் போர்க் குணம்மிக்க ஒரு புதிய இனம் தோன்றியது. (பைபிளில் வரும்) நோவா வின் மகன் ''செம்''மின் வழித்தோன்றல்களே அவர்கள். செம்மில் இருந்துதான் யூத, அரேபிய இனங்களைக் குறிக்கும் செமிட்டியர் என்ற பெயர் வந்தது.

செமிட்டிய இனத்தைச் சேர்ந்த ''சார்கோன்'' என்ற மன்னன் தோள் வலிமையால் பிற சிற்றரசர்களை வென்று, சுமேரியாவையும் அடிப ணிய வைத்து, ஒரு சாம்ராஜ்யத்தைக் கட்டினான். அதன் தலைநகர் ''அக்காட்''. அந்த வெற்றிக்குப் பின்னர் தான், சுமேரியக் கதைகள் பைபிளினால் சுவீகரிக்கப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறு ஊகிக்கக் கூடிய ஆதாரங்கள் நிறைய உள்ளன. நோவாவின் கதையில் வரும், ஊழிக்கால கடல் கொந்தளிப்பு கருங்கடல் பகுதியில் இடம் பெற் றுள்ளதை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். பூகோள வரைபடத் தைப் பார்த்தால், ''செம்'' மன்னனின் ராஜ்ஜியம் கருங்கடலில் இருந்து சிறிது தூரத்திலேயே அமைந்திருந்தது புலப்படும். மேலும் சார்கோன் மன்னனின் பிறப்பு பற்றிய கதை, யூதர்களின் மேசியா மோசசின் கதையை ஒத்துள்ளது. ஈராக்கை சதாம் ஹுசைன் ஆண்ட காலத்தில், சார்கோன் மன்னனின் பிறப்பு வருடாவருடம் கொண்டாடப்பட்டது. செம் மன்னனின் வம்சாவழியினராக தம்மை காட்டிக் கொண்ட யூதர் கள், பண்டைய ஈராக் மண்ணுக்குரிய கதைகளை பைபிளில் எழுதி வைத்தார்கள். பின்னர் அவற்றை தமது பரம்பரைக் கதைகள் என்று உரிமை கோரினார்கள்.

கி.மு. 1500 ஆண்டளவில் ''பாபிலோன்'' என்ற புதிய அரசு தோன் றியது. இவர்களின் காலத்திலும் நாகரீகம் தழைத்தது. பாபிலோனியர் களால் போற்றப்பட்ட மன்னன் ஹமுராய், மக்கள் நலச் சட்டங்களை இயற்றி, அவற்றின் வாசகங்களை நாடெங்கிலும் தூண்களில் பொறித்து வைத்தான். இதுவே நவீன சட்டங்களின் தோற்றமாக கருதப்படுகின் றது. பாபிலோனியர் காலத்தைக் கணிக்கும் காலண்டரும் பாவித்து வந்தார்கள். அவர்களின் நாட்காட்டியில் 12 மாதங்களும், ஒரு மாதத் திற்கு 30 நாட்களும், ஒரு நாளைக்கு 24 மணித்தியாலங்களும் இருந் தன. பாபிலோனிய சக்ரவர்த்தி நெபுகாநேசர் காலத்தில் சாம்ராஜ்யம் பாலஸ்தீனம் வரை விரிவுபடுத்தப்பட்டது. அந்தக் காலகட்டத்தில் யூதர் கள் சிறைப்பிடிக்கப்பட்டு, பாபிலோனிய தலைநகருக்கு நாடு கடத் தப்பட்டதாக யூத வரலாறு தெரிவிக்கின்றது. ஆனால் ஒரு சாம்ராஜ்ஜி யத்தின் கீழ் வாழும் சிறுபான்மை இனத்தவர்களைப் போல, யூதர்

களும் பாபிலோனிய தலைநகருக்கு இடம் பெயர்ந்திருக்க வாய்ப் புண்டு.

ஈராக்கிற்கு அரேபியர்கள் (முஸ்லீம்கள்) வருவதற்கு முன்னர், அதாவது கி.மு. 331 முதல் கி.பி. 636 வரை, ஈராக் முழுவதும் பாரசீகப் பேரரசின் ஒரு பகுதியாக இருந்தது. இடையில் சில காலம் அலெக்சாண்டரின் ஆக்கிரமிப்பின் கீழ் வந்து குடியேறிய கிரேக்கர்களும் அங்கே வாழ்ந்தனர். அரேபியரின் படையெடுப்பு இசுலாமை கொண்டு வரும் வரை, சாரதூசர் என்ற தத்துவஞானியின் மதம் உத்தியோகப் பூர்வ மதமாக இருந்தது. ''மாஸ்டா'' என்ற கடவுளை வழிபடும் ஓரிறைக் கோட்பாட்டைக் கொண்ட மதமாக விளங்கியது. (சாராத்தூசரின் ஓரிறைக் கோட்பாடு யூத / கிறிஸ்தவ / இசுலாமிய மதங்களுக்கு முந்தியது). பாரசீக சாம்ராஜ்ஜியத்தினுள் ஏற்பட்ட அதிகாரப் போட்டியும், உள்நாட்டுக் குழப்பங்களும், அரேபியரின் படையெடுப்புக்கு சாதகமாக அமைந்து விட்டன.

பாரசீகப் படைகள் இசுலாமியப் படைகளால் தோற்கடிக்கப்பட்ட பின்பு, ஈராக்கும்; இசுலாமியப் பேரரசின் ஒரு பகுதியாகியது. அரேபிய தீபகற்பத்தை சேர்ந்தவர்கள் ஈராக்கின் பல பகுதிகளிலும் சென்று குடியேறினார்கள். உள்ளூர் மக்களையும் இசுலாமிய மதத்தை தழுவச் செய்தனர். அவ்வாறு மதம் மாறியவர்கள் ஆளுபவர்களின் மொழியாகிய அரபு பேசக் கற்றுக் கொண்டார்கள். பாக்தாத் நகர் விரிவுபடுத்தப்பட்டு, பேரரசின் அரசியல் - கலாச்சார மையமாகியது. சீனாவுக்கும், ஐரோப்பாவுக்கும் இடையில் இடம்பெற்ற வர்த்தகப் போக்குவரத்தினாலும் பாக்தாத் பலனடைந்தது. மேலும் கீழைத்தேய நூல்கள் பல பாக்தாத் அரசவையில் மொழிபெயர்க்கப்பட்டன. அந்த நூல்களில் சில ஆயிரம் வருடங்களுக்குப் பின்னர் லத்தீனிலும், பிற ஐரோப்பிய மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டன.

இசுலாமியர்கள் தமது மதத்தை நிறுவனப்படுத்தியபொழுது, அதன் தலைமை ''உம்மா'' (பாராளுமன்றம்) என்ற பிரதிநிதிகளின் குழு பொறுப்பேற்றது. உம்மாவின் பிரதிநிதிகள் (பாராளுமன்ற உறுப்பினர்கள்) நாட்டின் பல பகுதிகளிலும் இருந்து தெரிவு செய்யப்பட்டனர். உம்மாவின் உறுப்பினர்கள் தமக்குள் கூடி ''கலீபா'' என்ற பிரதிநிதியை (பிரதம மந்திரி) தெரிந்தெடுப்பார்கள். ஆரம்ப காலத்தில் இசுலாமிய அரசுகளின் கலீபாக்கள் அனைவரும் அவ்வாறு ஜனநாயக முறையில் தெரிவு செய்யப்பட்டனர். இறைதூதர் முகமதுவின் மறை

வுக்குப் பின்னர் தலைமைப் பதவிக்கு பலர் போட்டியிட்டனர். முகமது நபியின் மருமகன் அலியை சில பிரதிநிதிகள் உம்மாவின் தலைவராக தெரிவு செய்தனர். ஆனால் இன்னொரு பிரிவு அதனை எதிர்த்தது. கி.பி. 661-ம் ஆண்டு, ஈராக் நகரான கூபாவில் வைத்து அலி படுகொலை செய்யப்பட்டார். இதன் விளைவாக அலியின் ஆதரவாளர்களும், எதிராளிகளும் ஒருவரோடொருவர் மோதிக் கொண்டார்கள். அந்த சகோதர யுத்தம் இசுலாமிய மதத்தில் பிளவுக்கு வழி வகுத்தது. அன்றிலிருந்து அலியை பின்பற்றியோர் ஷியா (ஷியா அத் அலி - அலியின் கட்சி) முசுலிம்கள் என அழைக்கப்பட்டனர். ஏனையோர் சுன்னி முசுலீம்கள் என்று அழைக்கப்படலாயினர்.

ஷியா, சுன்னி முசுலீம்களுக்கு இடையிலான பகை இன்று வரை தொடர்கின்றது. இரண்டு பக்கமும் உள்ள மதவெறியர்கள் அந்தத் தணல் அணையாமல் பாதுகாக்கின்றனர். முதலாவது இசுலாமிய சகோதர யுத்தத்திற்கு பின்னர், ஷியா முசுலீம்கள் தமக்கென தனியான மதச் சம்பிரதாயங்களை பின்பற்றி தனிச் சமூகமானார்கள். இன்றைய ஈராக்கில் ஷியா முசுலிம்கள் பெரும்பான்மையாக இருந்தபோதிலும், கிராமப்புற விவசாய சமூகமாக வாழ்ந்து வருவதால் அரசியலில் ஒதுக்கப்பட்டனர். சுன்னி முசுலீம்கள் பெரு நகரங்களில் வாழ்ந்து வருவதால், நீண்டகாலமாக அரசு நிர்வாகத்தில் கோலோச்சினார்கள்

16-ம் நூற்றாண்டில், அரேபிய அரச வம்சங்கள் இசுலாமியப் பேரரசை கட்டியாள தடுமாறிக் கொண்டிருந்தன. மேற்கில் துருக்கி ஒரு பலமான அரசியல் சக்தியாக உருவாகியது. இசுலாமிய மதத்தை தழுவியதால், பல்வேறு துருக்கி இனங்கள் ஒன்று சேர்ந்தன. நாகரிக வளர்ச்சியில் பின்தங்கியிருந்த துருக்கி இனங்கள், ஈராக்கில் நிலவிய உன்னதமான இசுலாமிய நாகரிகத்தை கண்டு வியந்தனர். (நமது நாட்டு மக்கள் ஐரோப்பியரின் நாகரிக வளர்ச்சியை கண்டு வியப்பதற்கு ஒப்பானது). ஒன்றிணைந்த துருக்கி இனங்களின் அரசியல் - இராணுவ தலைமை ஒஸ்மானியர்கள் (ஆங்கிலத்தில்: ஓட்டோமான்) என்ற அரச வம்சத்தின் கைகளில் இருந்தது. விரைவிலேயே முழு அரபு பிரதேசங்களும் ஒஸ்மானியரின் ஆட்சியின் கீழ் வந்தன. முதலாம் உலகப் போரில் எதிரணியில் நின்ற ஆங்கிலேயர்கள் கைப்பற்றும் வரையில், ஈராக் துருக்கியரால் ஆளப்பட்டு வந்தது. அதற்கு சாட்சியமாக இன்றைக்கும் துருக்கி மொழி பேசும் சிறுபான்மையினம் ஈராக்கில் வாழ்கின்றது.

★★★

2

# பிரிட்டிஷ் படைப்பில் உதித்த ஈராக்...

19-ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் தோன்றிய ஜெர்மானிய தேசிய அரசுக்கும், ஒஸ்மானியர்களுக்கும் இடையில் நெருக்கமான நட்புறவு இருந்தது. அதன் நிமித்தம் பெர்லினில் இருந்து பாக்தாத் வரை ரயில் பாதை நிர்மாணிக்கும் திட்டம் வந்தது. அதே காலத்தில் தான், ஜெர்மானிய பெட்ரோலிய நிபுணர்கள் ஈராக்கில் செய்த ஆராய்ச்சியின் பயனாக நிலத்தடி எண்ணெய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அந்தக் கண்டுபிடிப்பானது. பிற்கால ஈராக்கின் அரசியல் - பொருளாதாரத்தில் ஆதிக்கம் செலுத்தியது. ஆயினும் எதிர்பாராத விதமாக, முதலாம் உலகப்போரில் ஜெர்மனி தோல்வியுற்றது. போரில் ஜெர்மனியை ஆதரித்ததால் துருக்கியும் கடுமையாகப் பாதிக்கப்பட்டது. இதனால் ஒஸ்மானிய சாம்ராஜ்ஜியம் பலவீனமடைந்தது, அந்நியரின் ஊடுருவலுக்கு வழிவகுத்தது. போரில் வெற்றி வாகை சூடிய பிரிட்டனும், பிரான்சும் சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்திக் கொண்டன. ஒஸ்மானிய ஆதிக்கத்தில் இருந்த அரபு பிரதேசங்கள் யாவும், ஒன்றில் ஆங்கிலேயரினால் அல்லது பிரெஞ்சுக்காரரால் ஆக்கிரமிக்கப்பட்டன. அப்படித்தான் ஈராக் ஆங்கிலேயர் காலனியாகியது.

துருக்கியர் காலத்தில் ஈராக் ஒரே தேசமாக கருதப்படவில்லை. அப்போது அங்கே மூன்று மாகாணங்கள் இருந்தன. (தேசம் என்ற சொல் ஒஸ்மானிய சாம்ராஜ்யத்தை குறிக்கும்.) ஈராக்கின் தென்பகுதி,

குவைத்துடன் சேர்த்து, பஸ்ரா மாகாணம் என்று அழைக்கப்படலா யிற்று. மத்திய ராக், பாக்தாத் மாகாணம். குர்திய மக்கள் வாழும் வடஈராக் மொசுல் மாகாணம் ஆங்கிலேயர்கள் அந்த மூன்று மாகா ணங்களையும் ஒன்றாக இணைத்து ஈராக் என்று பெயரிட்டனர். அப் போதே குர்திய இனத்தவர்கள் தமக்கென தனி நாடு வேண்டுமென்று கோரிக்கை விடுத்திருந்தனர். (குர்து வீரர்கள் ஆங்கிலேயர் பக்கம் நின்று போரிட்டனர்) குர்திஸ்தான் கோரிக்கையை பரிசீலிப்பதாக ஆங்கிலே யர்கள் உறுதிமொழி அளித்தனர். ஆனால் இறுதியாக பாக்தாத்தில் ஒரு அரசை நிறுவி, அவர்கள் கையில் முழு ஈராக்கையும் ஒப்படைத்து விட்டு போய் விட்டார்கள். குர்தியரின் தனிநாட்டுக் கோரிக்கைக் குப் பைக் கூடைக்குள் போனது.

1960 வரையில் குவைத் தனியாக பிரிட்டிஷ் பாதுகாப்புக்கு உட்பட்ட பிரதேசமாக இருந்தது. குவைத்தில் பிரிட்டிஷ் ஆக்கிரமிப்பு தொடர்ந்ததற்கு இரண்டு காரணங்கள் இருந்தன. ஒன்று, குவைத் என்ற மாநிலத்தில் மட்டும் காணப்பட்ட அளவுக்கு மிஞ்சிய எண்ணெய் வளம். இரண்டு, புதிய ஈராக் அரசும், துருக்கியும், பாரசீக வளைகுடாப் பகுதியை பாவிக்க விடாமல் தடுப்பது. வளைகுடாவின் பொருளா தார - கேந்திர முக்கியத்துவம் காரணமாக தான் தொன்னூறுகளில் குவைத் மீட்பு யுத்தம் நடந்தது. துருக்கிய மேலாதிக்கத்திற்கு எதிராக போராடிய அரபு விடுதலைப் போராளிகளின் தலைவர் பைசல், டமாஸ்கஸ் (சிரியா) தலைநகராகக் கொண்ட அகண்ட அரபு தேசம் அமைக்க விரும்பினார். ஆனால் ஆங்கிலேயருக்கும், பிரெஞ்சுக்கார ருக்கும் இடையிலான இரகசிய ஒப்பந்தம் காரணமாக அந்தக் கனவு பலிக்கவில்லை. சிரியாவும், லெபனானும் பிரான்சுக்கு தாரை வார்க் கப்பட்டது. பைசலுக்கு கிடைத்தது ஈராக் மட்டும்தான். ஆங்கிலேயர் கள் பைசலை ஈராக் மன்னனாக முடி சூட்டி விட்டு 1932-இல் சுதந்தி ரம் வழங்கினார்கள். இதிலே கவனிக்க வேண்டிய சில அம்சங்கள் உள்ளன. ஜனநாயகப் பாதுகாவலர்களான பிரிட்டிஷார் ஈராக்கில் தேர் தலையோ, பல கட்சி ஜனநாயகத்தையோ அறிமுகப்படுத்தவில்லை. தேசங்களின் எல்லை பிரிக்கும் பொழுது உள்ளூர் மக்களின் விருப் பத்தை கேட்காமல், ஐரோப்பிய எசமானர்களே தீர்மானித்தார்கள்.

எல்லோராலும் மதிக்கப்பட்ட தலைவரான பைசல் சுதந்திரத்தின் பின்னர் ஓராண்டு மட்டுமே உயிரோடு இருந்தார். அவரது மரணத்

திற்கு பின்னர் முடிசூட்டிக் கொண்ட இளவரசர் காசியின் காலத்தில் பல பிரச்சினைகள் தோன்றின. ஈராக் இராணுவம் அரசியலில் தலையிட ஆரம்பித்தது. இரண்டாவது உலகப் போர் காலத்தில் இராணுவ அதிகாரிகள் பிரிட்டனுடனான உறவை துண்டித்து விட்டு, ஜெர்மனியுடன் உறவை ஏற்படுத்தினார்கள். ஏதோ அவர்கள் விருப்பம் என்று பிரிட்டன் விட்டுக் கொடுக்கவில்லை. ஈராக் மீது படையெடுத் தார்கள். பாக்தாத் கடற்கரையில் வந்திறங்கிய பிரிட்டிஷ் படைகள், ஒரு மாதத்திற்குள்ளேயே பாக்தாத்தை கைப்பற்றி விட்டன. (2003-ஆம் ஆண்டு சரித்திரம் திரும்பியது. பிரிட்டிஷ் படைகள் மீண்டும் ஈராக்கை ஆக்கிரமித்தன). பாக்தாத்தில் பிரிட்டிஷ் சார்பு பொம்மை அரசு ஆட்சிக் கட்டிலில் அமர்த்தப்பட்டது. புதிய உடன்படிக்கை ஒன்று போடப்பட்டது. அதன்படி ஈராக் பிரிட்டனில் தங்கியிருக்க வேண்டி யேற்பட்டது.

பிரிட்டிஷ் ஆக்கிரமிப்பின் பின்னர் ஈராக்கில் பல சமூக - பொருளாதார மாற்றங்கள் ஏற்பட்டன. தொழிற்துறை துரித கதியில் வளர்ந்தது. நிலங்கள் தொடர்பான புதிய சட்டம் ஒன்று நிலவுடை மையாளருக்கு சாதகமாக அமைந்தது. சிறிய விவசாயிகளின் நிலங் களை சுவீகரித்துக் கொண்டனர். இதனால் நிலமற்ற விவசாயிகளின் குடும்பங்கள் தொழில் தேடி நகரங்களுக்கு இடம் பெயர்ந்தனர். நக ரங்கள் பெருகின. கல்வி கற்ற மத்தியத் தர வர்க்கம் ஒன்று உருவா னது. இந்த வர்க்கம் அரசியல் விழிப்புணர்வு பெற்ற பொழுது, தமது நாடு நிலப்பிரபுக்களால் ஆளப்படுவதை புரிந்து கொண்டனர். அவர் களது மனக்குமுறலை பிரதிபலிக்கும் ஈராக் கம்யூனிஸ்ட் கட்சி உரு வாகியது.

மத்தியத்தர வர்க்கத்தினர் மட்டுமல்லாது, நகர்ப்புற தொழிலாளர் களும் ஆதரவளித்தனர். கம்யூனிஸ்ட் கட்சி வர்க்க விடுதலை குறித்து பேசியதால், பெருமளவு ஷியா முசுலீம்களும், குர்து இன மக்களும் கவரப்பட்டனர். இதற்கிடையே அரச குடும்பம் அரசியல் செல்வாக்கு இழந்திருந்தாலும், அவர்களது உல்லாச வாழ்வு பறிபோகவில்லை. ஈராக் அரசு நிலவுடைமையாளர்களினதும், பிரிட்டிஷாரினதும் நலன் களை மட்டுமே கவனித்து வந்தது. கம்யூனிஸ்ட் கட்சி தலைமையில் வேலை நிறுத்தப் போராட்டங்கள் அரசை ஆட்டம் காண வைத்தன. இராணுவத்திற்கு உள்ளேயும் அதிருப்தி நிலவியது.

எகிப்தில் நாசர் தொடங்கி வைத்த அரபு தேசிய அலை ஈராக் கரையை அடைந்தது. 14 ஜூலை 1958-ம் ஆண்டு, பிரிகேடியர் காசிம் தலைமையில் ''சுதந்திர அதிகாரிகள்'' ஆட்சியை கைப்பற்றினார்கள். மன்னராட்சி ஒழிக்கப்பட்டது. அரச குடும்பத்தினர் கொலை செய்யப் பட்டார்கள். ஈராக் குடியரசு பிரகடனம் செய்யப்பட்டது. உண்மை யில் 1958-ஆம் ஆண்டு இடம் பெற்ற ஈராக் புரட்சிதான் ஜனநாயகத் திற்கான முதற்படியாகும். அதுவரை காலமும் ஜனநாயகத்தின் காவல் தெய்வங்களான பிரிட்டிஷ்காரர்கள், ஈராக்கில் பிற்போக்கு மன்னராட் சியை ஆதரித்து வந்தார்கள். அவர்கள் எப்போதும் தமது நலன்களைப் பேணும் அரசாங்கத்தை அமைக்கவே விரும்பினார்கள். 1958 ஈராக் புரட்சி ஈராக் மக்களுக்கு பல உரிமைகளை பெற்றுக் கொடுத்தது. ஆனால் அவை மேற்கத்திய நலன்களுக்கு பாதகமாக இருந்தன.

ஈராக்கில் எண்ணெய் அகழும் தொழிலில் பிரிட்டிஷ், பிரெஞ்சு நிறுவனங்கள் ஈடுபட்டிருந்தன. கொள்ளை லாபமீட்டிய இந்த நிறுவ னங்கள் ஒரு சிறு தொகையை மட்டும் ராயல்ட்டியாக ஈராக் அரசுக்கு வழங்கி வந்தன. அது கூட மக்களுக்கு போய்ச் சேருவதில்லை. ஈராக் அரச குடும்பமும், அதிகாரிகளும் எண்ணெய் விற்ற ராயல்ட்டி பணத் தில் உல்லாசமாக வாழ்ந்தார்கள். புரட்சிக்குப் பின்னர் வந்த அரசாங் கம் ராயல்ட்டி தொகையை அதிகரித்தது. எண்ணெய் நிறுவனங்கள் அதற்கு ஒப்புக் கொள்ளவில்லை. உடன்பாட்டுக்கு வரமுடியாமல் போனதால், எண்ணெய் உற்பத்தியை நிறுத்தி விட்டு நாட்டை விட்டு வெளியேறின. இதனால் ஈராக் அரசு எண்ணெய் நிறுவனங்களை தேசி யமயமாக்கியது. தகுதியற்ற உள்நாட்டு முகாமைத்துவம் காரணமாக பல பொருளாதார பிரச்சினைகள் ஏற்பட்டன. பல வருடங்களுக்குப் பின்னர், 1968-ம் ஆண்டு, சோவியத் யூனியன் நிபுணர்களின் வருகைக்கு பின்னரே பெட்ரோலிய உற்பத்தி அதிகரித்தது. அதன் பிறகுதான் ஈராக் உலகில் இரண்டாவது எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடு என்ற அந் தஸ்தை பெற்றுக் கொண்டது.

1958 புரட்சி ஈராக் சமுதாயத்தில் ஏற்படுத்திய மாற்றம் அளப்பரி யது. பெறும் நிலவுடைமையாளர்களின் நிலங்கள் பறிமுதல் செய்யப் பட்டு, நிலமற்ற விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. (சதாம் ஹுசைன் காலத்திற்குப் பின்னர்தான் விவசாயத் துறையில் தனியார் வர்த்தக நிறு வனங்கள் தலையெடுத்தன). பிள்ளைகள் பாடசாலைக்கு செல்வது கட்

டாயமாக்கப்பட்டது. பல்கலைக்கழகம் வரையில் இலவசக் கல்வி வழங்கப்பட்டது. பெண்களுக்கு சமஉரிமை கிடைத்தது. பெண் கல்வி ஊக்குவிக்கப்பட்டது. ஈராக்கில் மொத்த பணியாட்களில் இருபது வீத மானோர் பெண்கள். இத்தகைய சமூக நலன் சார்ந்த பொருளாதார திட்டங்கள் சதாம் ஹுசைன் பதவியில் இருந்து அகற்றப்படும் வரை அமலில் இருந்தன. இடையில் எத்தனையோ ஆட்சிக் கவிழ்ப்புகள் நடந்திருக்கலாம். ஆனால் சமுதாய முன்னேற்றம் தடைப்படவில்லை.

சதாம் ஹுசைன் ஆட்சிக்கு வரும் வரையில் ஈராக் பத்துக்கும் குறையாத ஆட்சிக் கவிழ்ப்புகளை கண்டு விட்டது. 1958 புரட்சியின் பின் அரசமைத்த பிரிகேடியர் காசிமுக்கு பல எதிர்ப்புகள் வந்தன. பொதுவுடைமைவாதிகள், தாராளவாதிகள், தேசியவாதிகள் என்று பல பிரிவுகள் தமக்குள் சண்டையிட்டன. 1959-ஆம் ஆண்டு பல அரசியல் குழப்பங்கள் ஏற்பட்டன. முதலில் தேசியவாதிகள் வேட்டையாடப்பட்டு கொலை செய்யப்பட்டனர். வட ஈராக்கில் இனக்கலவரம் தோன்றியது. அதனை சாக்காக வைத்து கம்யூனிஸ்டுகள் கைது செய்யப்பட்டனர். காசிமின் அரசு ஒடுக்குமுறை இயந்திரமாகியது. இதே வேளை நாட்டில் இன்னொரு புதிய அரசியல் சக்தி தோன்றியது. ''பாத்'' (Ba'th -மீள் உயிர்ப்பு) எனப் பெயர் கொண்ட அரசியல் இயக்கம் ஆரம்பத்தில் பல்கலைக்கழகங்களில் மட்டுமே பிரபலமாக இருந்தது. பாரிசில் கல்வி கற்ற சிரியா நாட்டு மாணவர்களால் ''அரபு தேசியம், சோசலிசம், மதச்சார்பின்மை'' போன்ற கொள்கைகளை அடிப்படையாக வைத்து இந்த இயக்கம் உருவானது.

சிரியாவில் பாத் கொள்கைகள் பரவிக் கொண்டிருந்த காலகட்டத்தில் அங்குள்ள கல்லூரிகளில் பயின்று கொண்டிருந்த ஈராக் மாணவர்களும் கவரப்பட்டனர். அவர்கள் ஈராக்கிலும் வேர் விட்டனர். ஈராக் தொழிலாளரை நிறுவனமயப்படுத்தினர். வேலை நிறுத்தங்களை ஒழுங்குபடுத்தி காசிமின் அரசுக்கு நெருக்கடி கொடுத்தனர். பாத் உறுப்பினர்களின் தாக்குதல் குழுவை சேர்ந்த அனைவரும் கைது செய்யப்பட்டனர். ஆனால் ஒருவர் மட்டும் தப்பிவிட்டார். அவர்தான் சதாம் ஹுசைன். இந்தச் சம்பவம் சதாமை ஹீரோ நிலைக்கு உயர்த்தியது. கட்சியின் மத்திய குழுவில் இருந்த உறவினர் ஒருவரின் உதவியால் சதாம் கட்சியில் மேல்மட்டத்திற்கு வர முடிந்தது. 1963-ஆம் ஆண்டு, இராணுவத்திற்குள் ஊடுருவியிருந்த பாத் கட்சி ஆதரவாளர்கள் திடீர்

சதிப்புரட்சி மூலம் ஆட்சியைப் பிடித்தனர். தற்போது பாத் கட்சி நாட்டின் பிரதான கட்சியாகியது. ஆனால் இராணுவ போக்கிலான ஆட்சியாளருக்கும், கட்சிக்கும் இடையில் ஒத்துப் போகவில்லை. 1968-ம் ஆண்டு, மீண்டும் ஒரு சதிப்புரட்சி ஏற்பட்டது. இம்முறை பாத் கட்சி முழுமையான அதிகாரத்தைப் பெற்றுக் கொண்டது.

பாத் அதிகாரத்தை கைப்பற்றியவுடன் பல நிர்வாக மாற்றங்கள் ஏற்பட்டன. தேசத்தின் தலைமை "புரட்சிகர கட்டளைப் பணியகம்" என்ற நிறைவேற்று அதிகாரம் கொண்ட அமைப்பின் கீழ் வந்தது. கட்சியின் பெயர் "அரபு பாத் சோசலிசக் கட்சி" என்று பெயர் மாற்றப்பட்டது. செயலதிபர் அஹ்மத் ஹசன் அல் பாகிர் ஜனாதிபதியாகவும், இராணுவத் தலைமை அதிகாரியாகவும் பதவியேற்றார். சதாம் ஹுசைன் RCC உப தலைவரானார். அன்றிலிருந்து ஈராக் நிலையான ஆட்சியைக் கண்டது. ஆனால் உள்வீட்டு கணக்குத் தீர்த்தல்கள் தொடர்ந்தன. பாத் அரசாங்கத்தை ஏற்றுக் கொள்ளாத கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் தூக்கிலிடப்பட்டார். சில வருடங்களுக்குப் பின்னர், சோவியத் சார்பு கம்யூனிஸ்டுகள் "தேசிய முற்போக்கு முன்னணி" என்ற பெயரில் அரசாங்கத்தில் சேர்ந்தனர். அரபு தேசியத்தை முதன்மையாகக் கொண்ட பாத் கட்சி, அரபு பேரினவாதக் கூறுகளை கொண்டிருந்தது. அது பிற சிறுபான்மை இனங்களை இரண்டாம்தரப் பிரஜைகளாக பார்த்தது. வடக்கே உரிமைகளை கோரி எழுச்சி பெற்ற குர்த்தியர்களின் போராட்டம் நசுக்கப்பட்டது. குர்தியர்கள் ஆயுதப் போராட்டத்தைக் கையிலெடுத்தனர். மலை சார்ந்த பகுதிகளை மறைவிடமாகக் கொண்ட குர்திய கொரில்லாக்களை ஈராக் அரச படைகளால் அடக்க முடியவில்லை. பின்னர் அதுவே சதாம் அரசின் வீழ்ச்சிக்கும் வழிவகுத்தது.

பாக்தாத்தின் வடக்கே திக்ரித் என்ற சதாமின் பிறப்பிடத்தை சேர்ந்தவர்களின் ஆதிக்கம் பாத் கட்சியினுள் பெருகியது. பல முக்கிய அரசுப் பொறுப்புகள் யாவும் திக்ரித்காரர்களுக்கு சென்றன. இருந்தாலும் பிற சமூகங்களைச் சேர்ந்த விசுவாசிகளுக்கும் பதவிகள் கிடைத்தன. பாராளுமன்றத்தில் 250 உறுப்பினர்கள் அங்கம் வகித்தனர். இருந்தாலும் அவர்களிடம் அதிகாரம் இருக்கவில்லை. அனைத்து முடிவுகளும் RCC மட்டத்திலேயே எடுக்கப்பட்டன.

சதாம் ஹுசைன் ஆட்சிக்கு வந்த பின்பு உலக சந்தையில் எண்ணெய் விலை அதிகரித்திருந்தமை ஈராக்கிற்கு சாதகமாகப் போய் விட்டது. எண்ணெய் விற்று வந்த வருமானம், புதிய தொழிற்துறையில் முதலிடப்பட்டது. மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்தது. இதன் விளைவாக கிராமப்புறங்களில் விவசாயத்தை கவனிக்க ஆளில்லாமல் போனதால், எகிப்தில் இருந்து விவசாயிகளை இறக்குமதி செய்ய வேண்டியிருந்தது. பொருளாதார வளர்ச்சி காரணமாக ஈராக் தினாரின் பெறுமதி டாலரை விட அதிகமாக உயர்ந்தது. குவைத் யுத்தம் வரையில், ஈராக் உலகில் பணக்கார நாடுகளில் ஒன்றாகத் திகழ்ந்தது. இன்றைய நிலையுடன் ஒப்பிடும் பொழுது அதை பலரால் நம்பமுடியாது. ஈரானுடனான போர் கூட பொருளாதாரத்தில் பின்னடைவை ஏற்படுத்தவில்லை. அதற்குக் காரணம், குவைத், சவூதி அரேபியா, மேற்குலக நாடுகளில் இருந்து வந்து குவிந்த பணம். ஒரு கட்டத்தில் அமெரிக்க யுத்தக் கப்பல்கள் ஈராக்கின் எண்ணெய் ஏற்றுமதிக்கு பாதுகாப்பு வழங்கின. ஈரானுடனான போரை பயன்படுத்தி ஈராக் பெருமளவு ஆயுதங்களை வாங்கிக் குவித்தது. பிரிட்டிஷ் நிறுவனம் ஒன்றும், டச்சு வர்த்தகர் ஒருவரும் இரசாயன ஆயுதங்களை விற்றார்கள். அப்போதெல்லாம் யாரும் ஆட்சேபிக்கவில்லை. நீண்ட கால போரியல் அனுபவத்தைக் கொண்ட இராணுவம், நவீன ஆயுததளவாடங்கள் என்பன ஈராக்கை பிராந்திய வல்லரசாக்கியது. பிற்காலத்தில் அதுவே செருக்குடன் குவைத் மீது படையெடுக்கத் தூண்டியது.

ஈராக் என்ற தேசம் உருவான காலத்தில் இருந்து, குவைத் ஈராக்குக்கு சொந்தமான பிரதேசம் என்று பாக்தாத் ஆட்சியாளர்கள் உரிமை கோரி வந்தார்கள். அந்த உரிமை கோரலை அடிப்படையாகக் கொண்டு, சதாம் உத்தரவின் பேரில் ஈராக் இராணுவம் குவைத் மீது படையெடுத்தது. வளைகுடாவில் ஒரு துறைமுகத்திற்கான தேவையும், பணம் கொடுக்கல் வாங்கல் பிரச்சினையும் பிற காரணங்கள். குவைத் படையெடுப்பு குறித்து அமெரிக்க நண்பனுக்கு ஈராக் அறிவித்திருந்தது. அமெரிக்கா சம்மதிக்காவிட்டாலும், வாஷிங்டனில் இருந்து கிடைத்த சமிக்ஞை ஒன்றை தவறாக புரிந்து கொண்ட ஈராக் படையெடுப்பில் இறங்கியது. ஆனால் ஈராக்கை பொறியில் மாட்டி விடும் திட்டம் அது என்பது பின்னர் தெரிய வந்தது. குவைத்தை சேர்த்துக் கொண்டால் தனது வல்லரசு அந்தஸ்து உயரும் என்று ஈராக் கருதியது. அமெரிக்கா மனதில் வேறொரு திட்டம் இருந்தது. எண்ணெய் கண்டுபிடிக்கப்பட்ட

காலத்தில் இருந்து குவைத்தில் பிரிட்டிஷ் எண்ணெய் நிறுவனங்கள் ஆதிக்கம் செலுத்தின. ஈராக்கை ஆக்கிரமிக்க வைத்து, போருக்குள் இழுத்து விட்டு, அமெரிக்க இராணுவ உதவியைக் காட்டி, விடுதலை யான குவைத்தை தனது செல்வாக்குக்கு உட்படுத்தியது.

சதாம் அன்று குவைத் யுத்தத்தை வரப்போகும் போர்களின் தாய் என்று வர்ணித்தார். அது எவ்வளவு தீர்க்கதரிசனத்துடன் சொல்லப் பட்ட கூற்று என்பது பின்னர் நிரூபணமானது. குவைத் யுத்தத்தில் தோற்கடிக்கப்பட்ட ஈராக் மீது பொருளாதாரத் தடைகள் கொண்டு வரப் பட்டன. நாட்டின் பொருளாதாரம் உடைந்தது. ஒரு காலத்தில் வசதி யாக வாழ்ந்த மக்கள், ஓரிரு வருடங்களில் உணவுக்கே வழியற்ற ஏழை களானார்கள். பத்து வருடங்கள் கழித்து, மிகவும் பலவீனமடைந்த ஈராக் மீது இன்னொரு போர் திணிக்கப்பட்டது. இம்முறை சதாம் ஹுசைன் அரசைக் கவிழ்க்கும் நோக்குடன் பன்னாட்டுப் படைகள் நுழைந்தன. சதாமும், பிற முக்கியஸ்தர்களும் தூக்கிலிடப்பட்டனர். நாடு நீண்டதொரு அந்நிய ஆக்கிரமிப்புக்கு உள்ளானது.

★★★

3

# ஈராக்: 'பாத்' கட்சியின் தோற்றமும் விடுதலைப் போரும்

ஈராக்கின் மத்தியில் உள்ள ஒரு சிறிய நகரம் அது. அங்கேயிருக்கும் சந்தை மைதானத்தில் ஊர் மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து நடக்கப்போகும் விபரீதத்திற்குச் சாட்சி சொல்லக் காத்திருக்கின்றனர். ஊர் மக்களுக்கு மத்தியில் ஒரு இளைஞன் மரத்தோடு கட்டி வைக்கப்பட்டிருக்கிறான். அவனுக்கு நேர் எதிரே வேட்டைத் துப்பாக்கியுடன் ஒரு முதியவர் இறுகிய முகத்துடன் குறிபார்த்து விட்டுத் தயங்குகிறார். ''சுடு'' என உத்தரவிடுகின்றனர் சுற்றியுள்ள சிலர். துப்பாக்கியிலிருந்து சீறிப்பாய்ந்த தோட்டா இளைஞனின் காலைக் காயப்படுத்துகிறது. அத்துடன் அந்த முதியவர் மயங்கி விழுகிறார். அவரிடமிருந்து விழுந்த துப்பாக்கியை எடுத்த இன்னொரு இளைஞன் கட்டப்பட்டவனைச் சுட்டுக்கொல்கிறான்.

இவர்கள் மூவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். கொல்லப்பட்ட இளைஞன் மறைந்திருந்த போராளிகளை அமெரிக்கப் படைகளுக்குக் காட்டிக்கொடுத்த குற்றத்திற்காக ஊர்மக்களின் வற்புறுத்தலினால் அவனுக்குத் தண்டனை வழங்கியவர்கள் அவனது தந்தையும் தம்பியும்.

ஈராக்கில் தற்போது நடந்துகொண்டிருக்கும் யுத்தத்திற்கு பொது மக்களின் ஆதரவு எவ்வளவு தூரம் இருக்கிறதென்பதற்கு மேற்குறிப்

பிட்ட சம்பவம் ஒரு உதாரணம். அமெரிக்கப் படைகள் ஈராக்கை ஓரிரு மாதங்களில் கைப்பற்றியவுடன் அங்கே எந்த எதிர்ப்பியக்கமும் வராது எனத் திட்டவட்டமாகக் கூறினர் அமெரிக்கக் கொள்கை வகுப்பாளர் கள். வியட்னாமுடன் ஒப்பிடமுடியாது என ஆரூடம் கூறினர். இருப் பினும் ஈராக் மெல்ல மெல்ல வியட்னாமாகி வருவதை பலர் தற்போது ஒத்துக்கொள்கின்றனர். முதலாவது வளைகுடா யுத்தத்தின்போது இறந்த அமெரிக்கப்படையினரின் எண்ணிக்கையைவிட தற்போது நடக்கும் கொரில்லாப்போரில் இறந்த படையினரின் எண்ணிக்கை அதிகம். இது ஈராக்கைக் கைப்பற்றுவதற்கான போரில் இறந்த படையினரைவிட அதிகம். இவை அமெரிக்க அரசு வழங்கிய உத்தியோகப்பூர்வ அறிக் கையிலிருந்து பெறப்பட்டவை.

ஈராக் போரில் இறக்கும் படையினரைப்பற்றிய சரியான எண் ணிக்கை அறிவிக்கப்படுவதில்லை. பல மரணங்கள் 'விபத்துகளில்' ஏற்பட்டதாக அறிவிக்கப்படுகின்றன. அங்கே தினசரி சராசரி 20 தாக் குதல் சம்பவங்கள் நடைபெறுவதாக இராணுவ வட்டாரங்களை மேற் கோள் காட்டி செய்தி ஊடகங்கள் தெரிவிக்கின்றன. இராணுவ வாக னத் தொடர்கள் கண்ணிவெடியில் சிக்குதல், நடந்து செல்லும் படை யினர் தெருவோர மிதிவெடிக்கு அகப்படல் போன்ற அன்றாட தாக்கு தல் சம்பவங்களைத் தவிர அரசியல் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை தாக்குமளவிற்கு எதிர்ப்பியக்கம் வளர்ந்துள்ள து. பலருக்குப் 'புரியாத விடயமாக' ஐ.நா சபை, செஞ்சிலுவைச் சங்க அலுவலகங்களும் தாக்கப்பட்டுள்ளன.

முன்கூட்டியே எதிர்பார்க்கப்பட்ட ஈராக் விடுதலைப் போராட் டம், அமெரிக்கப் படைகள் நாட்டினுள் வந்தவுடனேயே ஆரம்பிக்க வில்லை. அதற்குச் சிறிது காலம் எடுத்தது. திடீரென நடந்த ஆட்சி மாற்றத்தால் தடுமாறிப்போன மக்கள் அமெரிக்க இராணுவத்திடம் இருந்து நிறையவே எதிர்பார்த்தார்கள். சதாமால் ஓரங்கட்டப்பட்டிருந்த பிற அரசியல் சக்திகளுக்கு இடம் கொடுக்கும் வகையில் பொதுத் தேர் தல்கள் நடத்தப்பட்டு ஜனநாயக ஆட்சி நடப்பதை மக்கள் விரும்பி னர். நாட்டின் பொருளாதார மீள்கட்டுமானம் விரைவாக நடக்கவேண் டுமென அவர்கள் கோரினர். அவ்வாறு எதுவும் நடக்கவில்லை. பொதுத் தேர்தலையோ ஜனநாயகத்தையோ காணவில்லை. ஒரே இர வில் வேலையிழந்த கோடிக்கணக்கான தொழிலாளர்கள் 'அதிர்ஷ்டக்

காரருக்கு' மட்டுமே வேலை கிடைப்பதைக் கண்டனர். அதிருப்தி அமைதி வழி ஊர்வலமாகி அமெரிக்கப் படைகளின் நிலைகளை முற்றுகையிட்டபோது, அமைதியிழந்த படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இறந்தவர்களின் சடலங்களைப் புதைக்கும் போது பலர் ஆயுதமேந்திப் போராடப் போவதாகச் சூளுரைத்தனர். ஈராக்கின் நீண்ட கெரில்லாப் போர் இவ்வாறுதான் ஆரம்பமாகியது.

ஒவ்வொரு நாளும் நடக்கும் தாக்குதல் சம்பவங்களைப் பார்க்கும்போது இவை மிகச் சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்டு நடத்தப்படுவதை அனைவரும் ஒப்புக்கொள்கின்றனர். ஆனால் இவற்றை நடத்துவது யார் என்பதில்தான் வேறுபட்ட அபிப்பிராயங்கள் கூறப்படுகின்றன. பதவியிழந்து தூக்கில் தொங்கிய சதாம் ஹுசையினின் ஆதரவாளர்கள்தான் இவர்கள் என்கிறது அமெரிக்கா. அரபுப் பத்திரிகையாளர்கள் புதிய இஸ்லாமியத் தேசியவாத இயக்கங்கள் உருவாகியுள்ளதாகக் கூறிவருகின்றனர். இதற்கிடையே மறக்காமல் அவ்வப்போது அல்-கைதாவின் பெயரும் அடிபடும். இந்த ஊகங்கள் மேலெழுந்தவாரியாகச் சரிபோல தோன்றினாலும் அறுதியிட்டுக் கூறமுடியாது உள்ளன. ஒரு சில சதாம் ஆதரவாளர்களினால் பெரும்பான்மை ஆதரவைத் திரட்ட முடிந்தது எப்படி? புதிய இயக்கங்கள் எப்படி நுட்பமான இராணுவத் தந்திரோபாயங்களை கையாள்கிறார்கள்? மதத்தை முக்கியமாகக் கருதாத சமூகத்தினுள் அல்-கைதா நுழைந்தது எப்படி?

மத்திய கிழக்கு நாடுகளில் ஈராக் இராணுவம் பிரமாண்டமானது. பல சிறப்புப் படையணிகளைக் கொண்டது. இதற்கும் மேலாக தசாப்தகால ஈரானுடனான போரில் அனுபவங்களைப் பெற்றுக்கொண்டது. இத்தகைய இராணுவம்தான் ஈராக்கை ஒரு காலத்தில் மத்திய கிழக்கின் பிராந்திய வல்லரசாகக் காட்டியது. மார்ச் 2003 ல் நடந்த அமெரிக்கப் படையெடுப்பின்போது சேவையிலிருந்த படைவீரர்கள் நான்கு லட்சத்திற்கும் அதிகம். ஈராக்கை அமெரிக்கா கைப்பற்றிய நாளில் இருந்து அவ்வளவு வீரர்களுக்கும் ஒரே நாளில் வேலை பறிபோனது. வேறு எந்த வேலையும் தெரியாத அவர்களின் எதிர்காலம் என்ன? என்பதைப்பற்றி ஆக்கிரமிப்பாளர்கள் உணர்ந்ததாகத் தெரியவில்லை. பாக்தாத்தில் முன்னாள் இராணுவ வீரர்கள் வேலை கேட்டு ஊர்வலமாகப் போனபோது இவ்வாறு கூறினார்கள்: 'வேலை கிடைக்காவிட்டால் எதிர்ப்பியக்கத்தில் இணைந்து கொள்வோம்'. அன்று சொன்னதைத் தற்போது செயலில் காட்டுகிறார்கள்.

சதாம் ஹுஸையினுக்கும் பிற ஆட்சியாளருக்கும் அமெரிக்கா படையெடுக்கப்போவது முன்கூட்டியே தெரிந்திருந்தது. ஒருபக்கம் நாட்டினுள் நுழையும் எதிரிப்படைகளை எதிர்த்துச் சண்டையிடும் பொறுப்பை பெதாயின் படையினரிடமும், மறுபக்கம் பாக்தாத்தை பாதுகாக்கும் கடமையைக் குடியரசுப் படையினரிடமும் ஒப்படைக் கப்பட்டது. இவர்களின் எதிர்ப்பு வீணாகி அந்நியப்படைகள் நாட்டை ஆக்கிரமிக்கும் பட்சத்தில் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் பற் றியும் ஆராயப்பட்டன. அதாவது வியட்னாம் பாணியிலான நீண்ட கெரில்லாப் போராட்டத்திற்கு அப்போதே திட்டமிடப்பட்டுவிட்டது.

இரகசியமாகவும், பகிரங்கமாகவும் பல திட்டங்கள் தீட்டப்பட் டன. சிறு ஆயுதங்கள் (AK47) பொதுமக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட ன. இது முன்கூட்டியே நடைபெற்ற விடயம். தற்போது கடைசித் தரு ணத்தில் துப்பாக்கிகள், ஆர்.பி.ஜி றொக்கட் லேஞ்சர்கள் மற்றும் வெடி மருந்துகள் போன்றவற்றை இராணுவ அதிகாரிகள் தத்தமது வீடுக ளுக்குக் கொண்டுபோய் பதுக்கி வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. ஆயுத விநியோகம் மட்டுமல்லாது நிறுவனமயமாக்கல் விடயத்திலும் கவனம் செலுத்தப்பட்டது. கிராமங்கள், நகரங்கள் எங்கும் ‘செல்’ எனப்படும் சிறு சிறு இரகசியக் குழுக்கள் அமைக்கப்பட்டன. குறைந் தது மூன்று பேரும், கூடியது பத்துப்பேரும் கொண்டவையாக குழுக் கள் உருவாக்கபபட்டன. இலகுவில் கொண்டு செல்லக்கூடிய ஆயுதங் களை மாத்திரமே இவர்கள் வைத்திருப்பர். எந்த இடத்தில் எந்தத் தாக்குதல் செய்வதென்பதை அந்தக் குழு மட்டுமே சுதந்திரமாக முடிவு செய்யும். அதாவது ஒரு குழு ஓரிடத்தில் என்ன செய்யப்பபோகிறது என்பது அடுத்த குழுக்களுக்குத் தெரியாது. தாக்குதல் திட்டங்கள் மட் டுமல்ல உறுப்பினர்களைப்பற்றிக் கூட அடுத்த குழுக்களுக்கு எதுவும் தெரியாது. இதனால் எங்காவது ஒரு நபர் இராணுவத்திடம் அகப்பட்டு சித்திரவதையினால் சக போராளிகளைக் காட்டிக் கொடுத்தாலும் கூட பிற குழுக்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படப்போவதில்லை.

உலகில் பலர் ஈராக் என்றால் சதாம் ஹுஸைன் மாத்திரம்தான் என்றுதான் அறிந்து வைத்திருக்கின்றனர். சதாம் தலைமை தாங்கிய பாத் கட்சி பற்றி அதன் அரசியல் வரலாறு பற்றி அறிந்தவர்கள் மிகக் குறைவு. சதாம் என்ற ‘தனிநபர்’ ஈராக்கை ஆளவில்லை. அதற்குப் பின்னால் பாரம்பரியம் மிக்க பாத் கட்சி இருந்தது. அதற்கெனக் குறிப் பிட்ட அரசியல் சித்தாந்தம் இருந்தது.

பாரிஸ் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற சிரிய கிறிஸ்தவரான மிஷெல் அஃப்லக்கின் சிந்தனையில் பிறந்த அரபுத் தேசியவாதத்தின் நிறுவனமயமாக்கல்தான் பாத் கட்சி . சதாம் என்னதான் அதிகார மம தையில் ஆட்சி புரிந்தாலும், பாத்தின் அரசியற் கொள்கைகளை பின் பற்றியவர் என்பதை மறுக்கமுடியாது. அப்போது சிரிய ஆட்சியாளர் கள் தம்மை 'இடதுசாரி பாத்' என்றும் ஈராக்கியரை 'வலதுசாரி பாத்' என்றும் அழைத்தனர். ஈராக் பாத்தில் சதாம் அசைக்க முடியாத தலை வராக இருந்தது உண்மை. ஆனால் கட்சி தனது செல்வாக்கை நாடு முழுவதும் பரப்பியிருந்தது. அவ்வப்போது கட்சி பொதுத்தேர்தல்கள் நடாத்தப்பட்டன. அதிக சுதந்திரமற்ற , ஜனநாயகமற்ற சூழ்நிலை நில விய போதும் ஈராக்கை சதாம் என்ற தனிநபர் மட்டுமல்ல பாத் கட்சி யும் சேர்ந்தே ஆட்சி செய்தது.

பிரிட்டிஷ் காலனியாதிக்கவாதிகளால் நியமிக்கப்பட்ட மன்னராட் சிக்கு எதிரான போராட்டம் மூலமே பாத் கட்சி ஆட்சிக்கு வந்தது. கொரில்லாப் போராட்டம், வெகுஜனக் கிளர்ச்சிகளை ஒழுங்குபடுத் தல் என்பன பாத் கட்சி வந்த பாதைகள். மூன்றாம் உலக நாடுகளின் பிற விடுதலை இயக்கங்களைப் போல் காலனிய ஆட்சிக்கு எதிராக பிரதேச தேசியவாதத்தை தனது அரசியலாக முன்னெடுத்தது. இத்தகைய பின்னணியில் வந்த பாத் கட்சி தற்போது சீர்குலைந்து அழிந்து போய் விட்டதாகக் கருதுவது யதார்த்தத்தை மறுப்பது போலாகும். சதாமின் காலத்தில் தொழில்முறை அரசியல்வாதிகளுக்கும், வர்த்தகர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது உண்மை. நிர்வாகத் தேவைகருதி பலத ரப்பட்டவர்களையும் சேர்த்துக் கொள்வதுண்டு. ஆனால் தற்போது நடப்பது அந்நிய ஆக்கிரமிப்புக் கெதிரான தேசிய விடுதலைப் போராட் டம். ஆகவே இன்றைய நிலையில் தேவையற்ற பலர் கழற்றி விடப் பட்டதும் அத்தகைய உதிரிகள் அமெரிக்கருடன் கூட்டுச்சேர்வதும் நடந் தது. அப்படியானவர்களில் பலர் அமெரிக்கப்படைகளால் கைது செய் யப்பட்டதால் அல்லது சரணடைந்ததால் பாத் கட்சியின் கதை முடிந் தது என தவறாகக் கணிப்பிடப்பட்டது.

அமெரிக்க அரசு என்னதான் சதாமின் ஆதரவாளர்களே தற்காலத் தாக்குதல்களுக்குக் காரணம் என்று திரும்பத் திரும்பக் கூறினாலும் அது வெறும் பிரச்சாரமாகவே அமைந்து விடுகிறது. சதாம் என்ற சர்வா திகாரியை அப்புறப்படுத்தவேதான் ஈராக் போனதாகவும் பதவியிழந்த

சர்வாதிகாரியின் ஆதரவாளர்களை அடக்கும் பணி இருப்பதால்தான் அங்கே தொடர்ந்து இருப்பதாகவும் சாக்குச் சொல்லத்தான் இந்தப் பிரச் சாரம் செய்யப்படுகிறது. இதன் அர்த்தம் இன்னும் எத்தனை அமெ ரிக்கப் படையினர் இறந்தாலும் அமெரிக்கா ஈராக்கை விட்டு வெளி யேறும் நோக்கம் தற்போது இல்லை என்பதே. எதிர்ப்பைச் சமாளிக்க மேலதிக படையினர் குவிக்கப்படலாம். பிறநாட்டு இராணுவங்களை அனுப்பும்படி கோரப்படலாம்.

எது எப்படியிருப்பினும் அமெரிக்கப் படையினருக்கு எதிரான எதிர்ப்பு நடவடிக்கைகள் பாத் கட்சியினாலேயே தலைமை தாங்கப்ப டுவது தற்போது தெளிவாகியுள்ளது. அவர்களின் யுத்த தந்ரோபாய முறைதான் முன்குறிப்பிட்ட சிறு போராளிக்குழுக்களை அமைக்கும் முறை. இந்தப் போர் முறையை முன்னொரு காலத்தில் சோவியத் யூனியனும் சொல்லிக் கொடுத்திருந்தது. அன்று சோவியத் யூனியன் வழங்கிய AK47, ஆர்.பி.ஜீ, சாம் போன்ற சிறு ஆயுதங்கள் இன்று உல கின் அதிநவீன ஆயுதங்களை வைத்திருக்கும் அமெரிக்க இராணுவத்தை எதிர்க்கப் பயன்படுகின்றன. இவற்றின் முன்னால் அதியுயர் தொழில் நுட்பம் தோற்றுப்போகிறது.

ஈராக்கின் போராட்டம் இஸ்லாமியவாதிகளால் முன்னெடுக்கப் படுவதாக சிலர் கூறிவருகின்றனர். பிற அரபுநாட்டுச் செய்தி ஊடகங் கள் இது போன்ற செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றன. ஏற் கெனவே சதாம் ஹுசைனை தமது போட்டியாளராக வெறுத்த அரபு நாடுகளின் மத்திய தர வர்க்கமே இந்தச் செய்தியைப் பரப்பிவருகிற து. இருப்பினும் ஈராக்கில் இசுலாமியவாதிகளும் போராடுவது உண் மைதான். ஒருகாலத்தில் எதிரிகளாகவிருந்த மதச்சார்பற்ற பாத் கட்சிக் கும் இசுலாமிய அடிப்படைவாதிகளுக்கும் இடையில் 'எனது எதிரி யின் எதிரி எனக்கு நண்பன்' என்ற அடிப்படையிலான கூட்டு ஏற் பட்டுள்ளமை பலரை வியக்க வைத்துள்ளது. ஈராக்கில் அமெரிக்க ஆக் கிரமிப்பு நீடிக்கும் காலம்வரையில் இந்தக் கூட்டணியும் நீடிக்கும்.

போராட்டத்தில் பிற அரபு நாடுகளில் இருந்து வந்த தொண்டர் கள் பங்கு பெறுவது உண்மைதான். இருப்பினும் பெரும்பான்மை யான போராளிகள் ஈராக்கிய குடிமக்கள் என்ற உண்மையை அமெ ரிக்க அரசு உலகிற்கு மறைத்து வருகின்றது. தொடரும் வேலையில்

லாப் பிரச்சினை, அத்தியாவசியத் தேவைகள் நிறைவேற்றப்படாமை, இராணுவக் கெடுபிடி , உள்நாட்டுக் கலாச்சாரத்தைப் புரிந்து கொள்ளாத அந்நிய நாட்டுப்படைகளின் அத்துமீறல்கள் என்பன அதிக இளைஞர்களை போராளிகளாக்கி வருகின்றன. முன்பு சதாமின் ஆட்சி இதைவிட பரவாயில்லை என்று கூறப் பலர் தலைப்பட்டுள்ளனர்.

ஈராக்கில் அமெரிக்கப் படைகளுக்கெதிரான போராட்டம் தொடர்வது ஈரான், சிரியா போன்ற அயல்நாடுகளுக்கு மகிழ்ச்சி தரும் விடயம். ஈராக் புதைசேற்றில் அமெரிக்கா சிக்கிக் கொண்டு தவிப்பதைப் பல நாடுகள் ஆர்வத்துடன் அவதானித்து வருகின்றன.

(பிற்குறிப்பு: இந்த ஆய்வுக் கட்டுரை சில வருடங்களுக்கு முன்னர் ஈராக்கில் போர் மும்முரமாக நடந்து கொண்டிருந்த காலகட்டத்தில் எழுதப்பட்டது. ஈராக்கிய விடுதலைப் போரின் பின்னணித் தகவல்களை அறிய விரும்புபவர்களுக்காக இங்கே பதிவிடுகின்றேன்.)

★★★

4

# எண்ணைக் கிணறு வெட்ட வகுப்புவாதப் பூதம் கிளம்பியது

*"எனக்குத் தெரிந்த ஒரு ஈராக்கிய வாலிபர் பொலிஸ் படையில் புதிதாகச் சேர்ந்தபொழுது ஏதோ ஒரு அமெரிக்கத் தனியார் பாதுகாப்பு நிறுவனமொன்று பயிற்சியளித்தது. பெரும்பாலான பயிற்சி நேரங்களை அந்த வாலிபர் ஜீப் வண்டி ஓட்டுவதிலும் ஆயுதங்களைக் கையாள்வதிலும் செலவிட்டார். பயிற்சி முடிந்த பின்பு ஒரு நாள் வேலைக்கு நியமித்துள்ளதாக அழைப்பு வந்தது. அவரிடம் ஒரு ஜீப் வண்டியைக் கொடுத்து பாக்தாத்தின் சன நெருக்கடிமிக்க சந்தைப் பகுதி ஒன்றில் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுமாறும் அங்கிருந்து அவருக்குத் தரப்பட்ட கைத்தொலைபேசியில் தொடர்பு கொள்ளும்படியும் தெரிவிக்கப்பட்டது. குறிப்பிட்ட இடத்துக்குச் சென்ற வாலிபர் ஜீப்பில் இருந்தபடியே கைத்தொலைபேசியை இயக்கிய பொழுது சிக்னல் கிடைக்கவில்லை. பின்னர் இறங்கி சிறிது தூரம் சென்று சிக்னல் கிடைத்துத் தொடர்பு கொண்டபோது... ஜீப் வெடித்துச் சிதறியது"*

— சிரிய பாதுகாப்பு அதிகாரி ஒருவரின் தகவல்
(Independent 26.04.06)

*"பாக்தாத்தில் ஒதுக்குப்புறமான இடத்தில் 14 வாலிபர்களின் இறந்த உடல்கள் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் கண்டெடுக்கப்*

பட்டன. அந்த 14 பேருக்கும் ஒரு ஒற்றுமை இருந்தது. அனைவரும் 'ஓமார்' என்ற பிரத்தியேகமாக சுன்னி முசுலிம்களுக்கேயுரிய பெயரைக் கொண்டவர்கள். அச்சமடைந்த உறவினர்கள் பிணங்களைப் பொறுப்பெடுக்க வரவில்லை. அவை தெரு நாய்களுக்கு உணவாகின.''

— (Guardian 04.08.06)

''யூலை, ஒகஸ்ட் மாதங்களில் இடம்பெற்ற வகுப்புவாதக் கலவரங்களில் மட்டும் 7000 சுன்னி அல்லது ஷியா முசுலிம்கள் இறந்துள்ளனர். இரு தரப்பிலும் 3 இலட்சம் மக்கள் இடம் பெயர்ந்துள்ளார்கள். நாளொன்றிற்கு 3,000 பேராவது அகதிகளாகப் பிற நாடுகளுக்கு ஓடியுள்ளனர்.''

— ஐ. நா. சபையின் விசேட அறிக்கை

இவ்வளவு நடந்தும் புஷ் நிர்வாகம் ஈராக்கில் உள்நாட்டுப் போர் அல்லது வகுப்புவாதக் கலவரம் நடப்பதாக ஒப்புக் கொள்ளவில்லை. அவர்களைப் பொறுத்தவரை ஷியா முசுலிம்களைப் பெருந்தொகையாகக் கொல்லும் குண்டு வெடிப்புகள் எல்லாம் சில வெறிபிடித்த பயங்கரவாதிகளின் செயல் (சுன்னி முசுலிம் மக்களை) படுகொலை செய்யும் அரசு சார்ந்த கொலைகாரக் கும்பல் யாவும் இனம் தெரியாதவர்கள்.

இவ்வாறுதான் சர்வதேச செய்தி ஊடகங்கள் எமக்குத் தெரிவித்து வந்தன. உலக மக்களும் அப்படியே நம்ப வைக்கப்பட்டனர். அதே நேரம், ஈராக் பொது மக்கள், 'அமெரிக்க ஆட்சியைவிட சதாமின் ஆட்சி மேல்'என்று கூறுமளவிற்கு அங்கே நிலைமை மோசமடைந்துள்ளது. ஆயிரம் வருடங்களுக்கு முன்பிருந்து சுன்னி-ஷியா என்ற இரு முசுலிம் பிரிவுகள் மார்க்க அடிப்படையில் பிரிந்திருந்தபோதும் இரு சமூக மக்களும் ஒருவருக்கொருவர் அடித்துக் கொண்டதில்லை. சுன்னி இசுலாம் பிரிவைச் சேர்ந்த சதாம் ஹுசைனின் ஆட்சியில் ஷியா முசுலிம்கள் அடக்கப்பட்டதாக மேற்கத்திய ஊடகங்கள் ஒரு பக்கச் சார்பான செய்திகளைக் கூறி வந்தன. உண்மையில் சதாம் தனக்கு எதிரான அரசியல் சக்திகளாக இனம் கண்ட ஷியா மதத் தலைவர்களையே கைது செய்து சிறையிலடைத்தார்.

சாதர் குழு அல்லது மஹதி குழு போன்ற ஆயுதமேந்திய ஈரான் ஆயத்துல்லாக்கள் வழியில் நடக்கும் மத அடிப்படைவாத இயக்கங்கள். முழு ஷியாக்களினதும் ஆதரவைப் பெற்றிருக்கவில்லை. இவர்களின் சதாம் அரசுக்கெதிரான சில தாக்குதல்கள் பலமுறை தோல்வியடைந்த போதிலும் சந்தேகத்தின் பேரில் பல ஷியா மக்கள் கைது செய்யப்பட்டனர், அல்லது கொல்லப்பட்டனர். ஈராக்கில் ஷியாக்கள் இரண்டாம்தரப் பிரஜைகளாக நடத்தப்படுவதான ஆதங்கம் அந்த மக்களுக்கு இருந்தபோதும், அதற்காக ஒரு போதும் அவர்கள் ஆதிக்கப்பிரிவான சுன்னி முசுலிம்களை வெறுக்கவில்லை. ஈரான் - ஈராக் யுத்தத்தின்போதுகூட ஷியா மக்கள் சதாம் அரசுக்கு விசுவாசமாகவே நடந்து கொண்டார்கள். ஈரானியர்களும் ஷியாக்கள் என்ற ஒரே காரணத்திற்காக அவர்கள் தமது தாய்நாட்டைக் காட்டிக் கொடுக்கவில்லை.

1990ம் ஆண்டு இடம்பெற்ற குவைத் மீதான ஆக்கிரமிப்பும் அதைத் தொடர்ந்த வளைகுடாப் போரும் ஈராக்கின் எதிர்காலத்தைத் தீர்மானித்தது. போரால் தோற்ற ஈராக்மீது ஐ. நா. சபை நாடுகள் (அமெரிக்க அழுத்தத்தால்) பொருளாதாரத் தடை விதித்தன. வடக்கு ஈராக்கில் குர்திய பிரதேசத்தின்மீதும், தெற்கு ஈராக்கில் ஷியா பிரதேசத்தின்மீதும் அமெரிக்க, பிரிட்டிஷ் விமானங்கள் கண்காணிப்புப் பணியை மேற்கொண்டதால் சதாமின் அரசு மத்திய ஈராக்கினுள் முடக்கி வைக்கப்பட்டது. சில ஆண்டுகளின்பின் பொருளாதாரத் தடை காரணமாக ஈராக் மக்கள் பட்டினி கிடந்து சாவதாக சர்வதேசக் கண்டனங்கள் எழுந்ததால் ஐ. நா. சபை ‘எண்ணைக்குப் பதிலாக உணவு’ என்ற திட்டத்தைக் கொண்டு வந்தது. இந்தத் திட்டத்தின்படி ஈராக் அரசு சர்வதேசச் சந்தையில் தான் விற்கும் எண்ணையின் பெறுமதிக்குச் சமமான உணவுப் பொருட்களை வாங்கிக் கொள்ளலாம். ஆனால், அதைக்கூட ஈராக் அரசு தான் விரும்பியபடி செய்ய முடியாது. எந்தெந்த உணவுப் பொருட்களை, எங்கே வாங்க வேண்டும் அதை ஈராக்கிற்கு எப்படிக் கொண்டு போவது, யாருக்குப் பங்கிட்டுக் கொடுப்பது போன்றவற்றை ஐ.நா சபையே தீர்மானித்தது. அதிலும் பல ஐ. நா. அதிகாரிகள் மற்றும் வர்த்தகப் பிரமுகர்கள் (தலைவர் கோபி அனானின் மகன் உட்பட) முறைகேடுகளில் ஈடுபட்டு கோடிக்கணக்கில் சுருட்டியவை வேறு கதை.

இந்த எண்ணை - உணவுப்பொருள் பண்டமாற்று நியாயமாக நடத்தப்படவும் இல்லை; அதன் பலனெல்லாம் மக்களுக்குப் போய்ச் சேரவும் இல்லை. குறிப்பாக, ஈராக்கின் மொத்த சனத்தொகையில் 13 வீதமேயுள்ள குர்திய மக்களுக்கு மொத்த வர்த்தகத்தின் 43வீத வருமானம் போய்ச் சேர்ந்தது. குர்தியப் பிரதேசத்தைக் கட்டுப்பாட்டில் வைத்திருந்த இரு ஆயுதமேந்திய இயக்கங்கள் சட்டவிரோதமாக எண்ணை கடத்தி விற்றுக் கிடைத்த வருமானம் இந்தக் கணக்கில் சேர்க்கப்படவில்லை. ஐ.நா. தயவில் சுயதீனமாக இயங்கக்கூடிய நிலையில் (இன்று வரை எவராலும் அங்கீகரிக்கப்படாத) 'குர்திஸ்தான்' என்ற தனிநாடே உருவாகிவிட்டது. எண்ணை கடத்தலால் அங்கே பெற்ற வருமானம் யப்பானில் இருந்து இறக்குமதி செய்த எலக்ட்ரோனிக் பொருட்கள் சொகுசு வாகனங்கள் என்று செலவு செய்யப்பட்டு பொருளாதாரம் வளர்ந்து கொண்டிருந்த காலத்தில் ஈராக்கின் பிறபகுதிகளில் வாழ்ந்த அரபு மக்கள் சாப்பாடு தேடி அலைந்து கொண்டிருந்தனர்.

தெற்கு ஈராக் ஷியா மக்கள் வான்வெளிக் கண்காணிப்புக்குள் அடங்கியதால் ஓரளவுக்குப் பாதுகாக்கப்பட்டபோதும் அவர்களும் பட்டினிச்சாவில் இருந்து தப்பவில்லை. புஷ் நிர்வாகம் ஈராக் மீதான படையெடுப்பை ஆரம்பித்தபோது சி.ஐ.ஏ.யும் அமெரிக்க இராணுவமும் குர்திய ஆயுதக் குழுக்களின் உதவியோடு முன்னேறின. அரபு மக்களையும் குர்திய மக்களையும் மேற்குறிப்பிட்ட சம்பவங்கள் நிரந்தரமாகப் பிரித்துவிட்டன. அரபுக்கள் குர்தியரை ஏகாதிபத்தியத்தின் அடியாட்களாகப் பார்த்தனர். குர்திய ஆயுதக் குழுக்களுக்கு இசுரேல் இராணுவப் பயிற்சி அளித்ததாக வந்த தகவல்கள் தற்போது ஊர்ஜிதப்படுத்தப்பட்டுள்ளன. இன்றுள்ள ஈராக்கின் புதிய இராணுவத்திலும் பொலிஸிலும் கணிசமான அளவு குர்தியர்கள் பணி புரிகின்றனர்.

அமெரிக்க இராணுவம் ஈராக் முழுவதையும் பிடித்த பின்பு செய்த முதல் வேலை சதாம் ஆட்சியின் கீழ் பணி புரிந்த அனைத்து இராணுவ வீரர்களையும் வீட்டிற்கு அனுப்பியதுதான். அந்தப் பழைய இராணுவத்தில் பெருமளவு சதாம் விசுவாசிகளும் பாத் ஆதரவாளர்களும் சுன்னி முசுலிம்களும் அங்கம் வகித்தமை உண்மைதான்.

இருப்பினும் இராணுவத் தொழிலைத் தவிர வேறெதுவும் தெரியாத வீரர்கள் தொழிலிழந்தவர்களாய்த் தமது குடும்பத்தைக் காப்பாற்றும் வழி தெரியாது திண்டாடினர். இந்த அவலங்களை எள்ளளவும் கவனத்திற்கெடுக்காத அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்கள் சதாம் புதிதாக உருவாக்கிய ஈராக் இராணுவத்தில் ஷியா முசுலிம்களைப் பெருமள வில் சேர்த்தனர். நாட்டின் பொருளாதாரம் ஸ்தம்பித்து வேலையற்றோர் எண்ணிக்கை 80வீதமாக இருந்த காலத்தில் இராணுவ-பொலிஸ் வேலைகளுக்காக ஷியா இளைஞர்கள் முண்டியடித்ததில் வியப் பில்லை.

ஆட்சியில் இருந்து அகற்றப்பட்ட 'பாத்' கட்சியினரும் வேலை யிழந்த இராணுவ வீரர்களும் ஒன்று சேர்ந்து கிளர்ச்சிக் குழுக்களை அமைத்தனர். இந்தக் குழுக்கள் தேசியவாத அடிப்படையைக் கொண் டிருந்த போதிலும் அவற்றின் உறுப்பினர்கள் சுன்னி முசுலிம் பிரிவில் இருந்தே வந்தனர். புதிதாக உருவாக்கப்படும் இராணுவமும் பொலி சும், நாளை தம்மை அடக்க ஏவிவிடப்படும் அரச இயந்திரங்களாக மாறும் என்ற நியாயமான அச்சம் காரணமாக பாதுகாப்புப் படை களில் வேலை தேடிச் சென்ற பல நூற்றுக்கணக்கான இளைஞர்களை கிளர்ச்சிக்காரர்கள் குண்டு வைத்துக் கொன்றனர். துரதிர்ஷ்டவசமாக இவ்வாறு கொல்லப்பட்ட இளைஞர்கள் அனைவரும் ஷியா முசுலிம் கள் என்பதால், வகுப்புவாதப் பிரிவினை அப்பொழுதே வேர் விடத் தொடங்கியது. பல தசாப்தங்களாக இரண்டாம் தரப் பிரஜைகளாக அரசு அதிகாரமற்றிருந்த ஷியாக்களைப் பொறுத்தவரை தற்போது கிடைத்துள்ளது ஒரு பொன்னான வாய்ப்பு. புதிதாக அமைக்கப்பட்ட அரசாங்கம் இராணுவம் பொலிஸ் ஆகிய அதிகார அமைப்புகளில் தமது பிரதிநிதித்துவத்தை ஸ்திரப்படுத்துவதன்மூலம் ஷியா முசுலிம் கள் ஈராக்கின் ஆளும் பரம்பரையாக விரும்பின. பொம்மைகளைக் கொலு வைப்பதைப்போல ஈராக்கியரைத் தன் விருப்பப்படி ஆட்டிப் படைத்த அமெரிக்காவும் ஷியா முசுலிம்களின் கைகளில் ஆட்சி அதி காரத்தை ஒப்படைத்தது.

இதனால் ஷியா மத அடிப்படைவாத சக்திகள் புத்துயிர் பெற்றன. ''ஈராக்கில் இசுலாமிய புரட்சிக்கான தலைமைக்குழு என்ற கட்சி அரசாங்கத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றது. அந்தக் கட்சியைச் சேர்ந்த

அமைச்சரின் பொறுப்பில் உள்துறை அமைச்சு உள்ளதும் பாதுகாப்புப் படைகள் அந்த அமைச்சின் கீழ் வருவதும் இங்கே சுட்டிக் காட்டப் படவேண்டும். மேற் குறிப்பிட்ட மதஅடிப்படைவாதக் கட்சியின் தொண்டர்கள் பொலிஸ்காரர்களாகவும் இராணுவ வீரர்களாகவும் நியமிக்கப்பட்டார்கள். 'மஹதி இராணுவம்' என்ற இன்னொரு ஷியா ஆயுதக்குழு ஈராக் பொதுத் தேர்தல்கள் நடத்தப்படும் வரையில் தமக் கென கட்டுப்பாட்டுப் பிரதேசங்களை அமைத்து தனிக்காட்டு ராஜாக் களாக ஆதிக்கம் செலுத்தி வந்தன. அந்தப் பிரதேசங்களைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவும் மஹதி இராணுவத்தின் ஆயு தங்களைக் களையவும் அமெரிக்க இராணுவம் பல தடவை முயற்சி செய்தபோதும் தோல்வியுற்று, இறுதியில் சமரசமாகப் போனது. மஹதி இராணுவ வீரர்கள் பலரை தேசிய இராணுவத்திலும் பொலிஸ் படை யிலும் இணைத்ததன் மூலம் அந்தச் சமரசம் எட்டப்பட்டது.

மேலே குறிப்பிட்ட அரசியல் மாற்றங்கள் யாவும், ஒரு பக்கத்தில் அமெரிக்கா ஈராக்கில் புதிய ஆளும் வர்க்கத்தை நிலைநாட்ட உதவிய போதும், மறுபக்கத்தில் சுன்னி- ஷியா முசுலிம் பிரிவுகளுக்கிடையில் வெறுப்பையும் அவநம்பிக்கையையும் உருவாக்கி அவர்களை எதிரி களாக்கிவிட்டது. இந்தப் பிரச்சினையை நிரந்தரமாக்கும் கைங்கரி யத்தை ஆற்ற எங்கிருந்தோ வந்தார்கள் சர்காவி தலைமையிலான அல்கைதா குழுவினர். ஈராக் மீதான அமெரிக்க ஆக்கிரமிப்பை தமது சண்டைப் பயிற்சிக்குப் புதிய களம் கிடைத்ததாகக் கருதிய அல்கை தாவினர் சுன்னி முசுலிம்களைத் தம் பக்கம் கவர்ந்தனர். அல்கைதா சவுதி அரேபியாவின் வஹபி என்ற இசுலாமியக் கடும் போக்காள ரின் கொள்கைகளை தன்னகத்தே கொண்டிருப்பதால் ஷியா முசுலிம் கள் ஆதரவளிக்கவில்லை. வஹபிஸ்ட்டுக்களைப் பொறுத்தவரை, சியாக்கள் முசுலிம்கள் அல்லர். ஆகவே, 'ஷியா என்ற போலி முசுலிம் கள்' மீது வெறுப்புக் கொண்ட ஈராக்கிய அல்கைதா (அல்லது மக்கள் பார்வையில் வஹபிஸ்டுக்கள்) ஷியா முசுலிம்களின் புனிதத் தலங் களைத் தாக்குவதன்மூலம் தமது மதவாத அதிகாரத்தை சுன்னி முசுலிம்கள் மத்தியில் நிலைநிறுத்த விரும்பியது. ஷியா ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடுவது என்ற பெயரில் அப்பாவி ஷியா முசுலிம் களை கொன்று குவித்தது. அவர்களது தொலைநோக்கற்ற குறுகிய மதவாதம் தற்காலிகமாகச் சில சுன்னி முசுலிம்களின் ஆதரவைப்

பெற்றுத் தந்தது. இருப்பினும் ஒரு கட்டத்தில் இப்படியான செயல்கள் தமக்குத் தீமையே அன்றி நன்மையைத் தரா எனப் புரிந்து கொண்ட ஈராக்கிய சுன்னி முசுலிம் மக்கள் அல்கைதாவை ஒதுக்க ஆரம்பித்த னர். ஆனால் அப்போது காலம் கடந்துவிட்டது.

ஈராக்கில் அமெரிக்க ஆக்கிரமிப்பாளருக்கு எதிரான ஆயுதம் ஏந்திய கிளர்ச்சியில் இசுலாமியவாதிகளின் பங்கு குறிப்பிடத்தக்கது. ஆரம்பத்தில் நாடளாவிய அமைப்பாக ஒழுங்குபடுத்தக்கூடிய பலமான தலைவர் இல்லாமல் இருந்த கிளர்ச்சிக் குழுக்கள் ஸர்காவியின் வரவுக்குப் பின் உற்சாகமடைந்தன. இருப்பினும் ஸர்காவியின் குறுகிய மதவாத அரசியல் அழிவுப்பாதையில் கொண்டு செல்லும் பிழையான சித்தாந்தம் என்பதைப் புரிந்து கொண்ட போராளிகளும் ஆதரவாளர்களும் மெல்ல விலகிக் கொண்டனர். ஒரு சில இடங்களில் நிலப்பிரபுக்களால் ஆதரிக்கப்பட்ட, ஈராக் அரசாங்கத்தினால் நிதி வழங்கப்பட்ட பிரதேசவாதக் குழுக்கள் அல்கைதாவை எதிர்த்துப் போராடி விரட்டி அடித்தனர்.

அல்கைதா ஆதரவாளர்கள் தற்போது ஈராக் எல்லையோரம் இருந்த அன்பர் மாகாணத்தை மட்டும் தமது கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருந் தனர். அமெரிக்க இராணுவம் இருந்த மாகாணத்தைக் கைப்பற்ற எடுத்த முயற்சிகள் தோல்வியடைந்தன.

இன்றுள்ள ஈராக் அரசியல் நிலவரத்தைச் சுருக்கமாகப் பார்ப் போம். வடக்கே குர்திஸ்தான் பிரதேசத்தில் முன்பு ஒரு காலத்தில் ஒன் றோடொன்று எதிர்த்து சகோதர சண்டையிட்டுக் கொண்டிருந்த பர்சானி மற்றும் தலபானி தலைமையிலான இரு குர்திய இயக்கங்கள் தற்போது தமக்குள் உடன்பாடு கண்டு சமாதானமாகி உள்ளன. குர்திஸ்தான் (பிராந்திய) பாராளுமன்றத்தில் இரு கட்சிகளும் அங்கம் வகித்தன. இருப்பினும் அவ்விரு கட்சிகளினதும் ஆயுதமேந்திய உறுப்பினர்கள் தத்தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் ஆதிக்கம் செலுத்துகின்றனர். தெற்கே ஷியா முசுலிம் அரேபியர்கள் வாழும் பிரதேசத்தில் SCIRI, மஹ்தி இராணுவம் ஆகிய இயக்கங்களும் தமக்கென சில கட்டுப்பாட் டுப் பிரதேசங்களில் ஆயுதமேந்திய உறுப்பினர்களையும் நிறுத்தி வைத்

துள்ளனர். ஆங்காங்கே காவலரண்கள் அமைத்து பொதுமக்களைச் சோதனையிடுகின்றனர். சில நேரம் ஒரே வீதியில் பொலிஸ் சோதனைச் சாவடியும், சில கிலோமீட்டர்கள் தள்ளி ஆயுதக்குழுக்களின் சோதனைச் சாவடியும் காணப்படுவதால் மக்கள் யாருக்குத் தப்புவது என்று தெரியாமல் திண்டாடுகின்றனர். முழுக்க முழுக்க ஷியா முசுலிம்களையே உறுப்பினர்களாகக் கொண்ட அதேநேரம், அப்பாவி ஷியா பொதுமக்கள் மீது ஆதிக்கம் செலுத்தும் இந்த ஆயுதமேந்திய இயக்கங்கள் கடுமையான இசுலாமிய மதச் சட்டங்களை அமுல்படுத்தி வருகின்றனர். இத்தகைய மத அடிப்படைவாத அரசியல் சக்திகளின் ஆதரவு தமக்கு அவசியம் என்பதால் அமெரிக்க - பிரிட்டிஷ் படைகள் இவற்றைக் கண்டு கொள்ளாமல் மறுபக்கம் பார்த்துக் கொண்டு போகின்றன.

தலைநகர் பாக்தாத்தைக் கொண்டிருக்கும் மத்திய ஈராக்கைச் சேர்ந்த சுன்னி முசுலிம் அராபியர்கள் வாழும் எழுச்சி மிக்க பூமி. அங்கே யாரும் தமது கட்டுப்பாட்டில் இருப்பதாக அறிவிக்க முடியாது. ஃபலூஜா போன்ற வீரகாவியம் படைத்த மண்ணுக்குச் சொந்தமானவர்கள் பல்வேறு குழுக்களாகப் பிரிந்து நிற்கின்றனர். அதிர்ஷ்டவசமாக, களத்தில் நிற்கும் பாத் தலைமையிலான தேசியவாதக் குழுக்களுக்கும் பிற இசுலாமியவாதக் குழுக்களுக்கும் இடையில் கொள்கை வேறுபாடு இருந்தபோதிலும் சகோதரச் சண்டை இதுவரை இல்லை. அமெரிக்கா இதுவரை வெளியே சொல்லாவிட்டாலும் பாக்தாத் நகரம் மட்டும் தான் ஈராக் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் உள்ளது. அமைச்சு அலுவலகங்கள், பிற அதிகாரமையங்கள் வெளிநாட்டுத் தூதுவராலயங்கள், ராஜதந்திரிகளின் வசிப்பிடங்கள் மற்றும் அமெரிக்க இராணுவத்தின் கட்டளைத் தலைமையகம், ஊடகவியலாளர்கள் மற்றும் பன்னாட்டு நிறுவனங்களின் தலைமையகங்கள், இவற்றுடன் மேற்படி நிறுவனங்களில் தொழில் புரியும் பணியாளர்களின் குடும்பங்கள் எல்லாமே உயர்பாதுகாப்பு வலையத்திற்குள் அடங்குகின்றன. இந்த உயர்பாதுகாப்பு வலையம் நாலாபுறமும் கோட்டை மதில்களால் சூழப்பட்ட தனியான பிரதேசம். அதாவது பாக்தாத் நகரத்தினுள் இன்னொரு நகரம். நிச்சயமாக இந்த உயர்பாதுகாப்பு வலையத்தினுள் வசிப்பவர்களுக்கு வெளியில் என்ன நடக்கிறதென்று தெரியாது. சர்வதேச ஊடகவியலாளர் உட்பட, இந்த வலையத்தில் மட்டுமே

கிடைக்கும் ஆடம்பரங்களான 24 மணிநேர மின்சாரம், எரிபொருள், உணவுப் பொருட்கள் மற்றும் இறக்குமதிப் பொருட்கள் என்பன வெளியில் வாழும் சாதாரண ஈராக்கிய மக்களுக்கு அரிதாகவே கிடைக் கின்றன.

இந்த ஏற்றத்தாழ்வான பொருளாதார நிலையால் மக்கள் தீவிரவாத இயக்கங்களை நோக்கி இலகுவில் கவர்ந்திழுக்கப்படுகின்றனர். பாதுகாப்பின்மை, பொருளாதார நெருக்கடி என்பன புதிய தீவிர வாதிகளை உருவாக்கும் காரணிகளாக இருக்கின்றன. இதுவரை கூறப் பட்ட தகவல்களின்படி ஈராக்கில் அராஜகம் கோலோச்சுவது தெளிவாகும். அங்கே ஜனநாயக முறைப்படி தெரிவான அரசாங்கம் பேரளவில் தான் ஆட்சியில் உள்ளது. இந்த இலட்சணத்தில்தான் ஈராக் பிரச்சினைக்குத் தீர்வென்ன என்று கேட்டு அமெரிக்க ஜனாதிபதி ஒரு ஆய்வுக்குழுவை அமைத்தார். இதுபோன்ற எத்தனையோ ஆய்வுக் குழுக்கள் கடந்த காலத்தில் செய்த எச்சரிக்கைகளைப் பொருட்படுத்தாது மமதையால் தன் விருப்பப்படி நடந்து கொண்ட உலகின் அதிசக்தி வாய்ந்த நாட்டின் ஜனாதிபதி புஷ்ஷிற்கு காலம் கடந்த பின்பு ஞானம் பறந்தது. ''சதாமைத் தூக்கிலிட்டோம்; ஜனநாயகத்தை மீட்டோம்'' என்பது போன்ற வாய்ச் சவடால்கள் யாருக்கும் உதவவில்லை. சாதாரண ஈராக்கிய மக்களோ ''எமக்கு பாதுகாப்பே முதல் முக்கியம். உயிர்போன பின்பு ஜனநாயகம் என்ன தேவைக்கு?'' என்று கேட்கிறார்கள்.

தற்போது படிப்படியாக தனது இராணுவத்தை விலக்கிக் கொள்ள அமெரிக்க அரசு முன்வந்தபோதும் ஈராக்கின் எதிர்காலம் குறித்து பல கேள்விகள் எழுகின்றன. அமெரிக்க இராணுவம் நாட்டை விட்டுப் போன உடனேயே ஆயுதமேந்திய கிளர்ச்சிக் குழுக்கள் பாக்தாத்தில் இருக்கும் அதிகாரமற்ற பொம்மை அரசைக் கவிழ்த்துவிட்டு தமக்குள் சண்டையிட்டு ஆட்சியதிகாரத்திற்காக போட்டி போடுவார்கள். நிச்சயமாக பலமானதே வெல்லப் போகிறது. அதைவிட ஈராக் மூன்று துண்டாக உடையும் அபாயமும் உள்ளது. அப்படி உருவாகும் புதிய தேசங்கள் பிராந்திய வல்லரசுகளின் தயவிலேயே தங்கி இருக்க வேண்டி இருக்கும். குர்திஸ்தான் என்ற புதிய நாடு உருவாவதைத் துருக்கி ஏற்றுக்கொள்ளாது. துருக்கியிலும் தனிநாடு கோரும்

குர்தியருக்கு இது உந்து சக்தியாக இருக்கும் என்பது மட்டுமல்ல, ஈராக்கின் சிறிய சிறுபான்மையினரான துருக்கி மொழி பேசும் மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பது என்ற பெயரில் அடிக்கடி தலையிடவேண்டி இருக்கும் தெற்கு ஈராக்கில் ஏற்படப் போகும் ஷியா இசுலாமியக் குடியரசுக்கு ஈரான் பக்கபலமாக இருக்கும். ஷியா முசுலிம்களின் அரசியல் அதிகாரத்தை அரபுலகில் விரிவுபடுத்த தனக்குக் கிடைத்திருக்கும் சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்தும். அதற்குப் பதிலடியாக சவுதிஅரேபியாவும் ஜோர்டானும் மத்திய ஈராக்கில் சுன்னி முசுலிம் அதிகாரத்தை நிலைநாட்டப் பாடுபடும். சவுதி அரேபியாவில் கணிசமான அளவு ஷியா முசுலிம்கள் வாழ்வதும் அவர்களின் உரிமைகள் பறிக்கப்பட்ட நிலையில் எழுச்சிக்குத் தயாரா வதும் குறிப்பிடத்தக்கது. மேலும் முதன்முறையாக வளைகுடாக் கடலின் சிறிய தீவான பாஹ்ரெயினில் ஷியாக்களின் கட்சி பெரும் பான்மை வாக்குகளைப் பெற்றுள்ளமை ஆட்சியாளரை மகிழ்ச்சிப் படுத்தவில்லை.

அமெரிக்காவைப் பொறுத்தவரை அன்று தாம் செய்த பிரச்சாரத் தைத் தாமே நம்பியதன் பலனைத் தற்போது அனுபவிக்கின்றனர். சதா மின் சர்வாதிகாரத்தில் இருந்து தம்மை விடுதலை செய்ததன் நன்றி யாக ஈராக்கிய மக்கள் புதிய அரசாங்கத்திற்கு ஆதரவளிப்பார்கள் என்ற நம்பிக்கை பொய்த்து விட்டது. அதனால் பின்னரும் தீவிரவாதக் குழுக் களுடன் பேசும் நிலைக்குத் தள்ளப்பட்டது. முதலில் அமெரிக்கா குர்திய ஆயுதபாணிக் குழுக்களுடன் கூட்டணி அமைத்துக்கொண்டு அரேபியர்களை (சுன்னி - ஷியா முசுலிம்கள்) எதிர்த்துப் போரிட்டது. இரண்டாவதாக, ஷியா ஆயுதபாணிக் குழுக்களுடன் சேர்ந்துகொண்டு சுன்னி முசுலிம்களை எதிர்த்துப் போரிட்டது. கடைசியாக, சுன்னி முசுலிம் ஆதிக்கத்தில் இருக்கும் சில முன்னாள் பாத் கட்சித் தலைவர் களுடன் சில உடன்பாடுகளுக்கு வர உள்ளது. அரசியல் அதிகாரத்தை நிலை நாட்ட யாருடனும் கூட்டுச் சேரலாம். யாரோடும் எதிர்த்துப் போரிடலாம்.

ஈராக்கில் எதிர்காலத்தில் எந்த அரசியல் சக்தி ஆட்சிக்கு வந்தா லும் சர்வதேச பொருளாதார சமூகத்தில் சேராமல் நாட்டைக் கட்டி யெழுப்ப முடியாது. அப்போது அமெரிக்காவுடன் நல்லுறவைப்

பேணுதல் தவிர்க்க முடியாதது. பொருளாதார வரலாற்றைப் பின்னோக்கிப் பார்க்கின் சதாமின் காலம் ஒரு பொற்காலம். தேசியமய மாக்கப்பட்ட எண்ணை உற்பத்தியால் கிடைத்த வருமானம் அபிவிருத் திக்குச் செலவிடப் பயன்பட்டதால் தனிநபர் வருமானமும் அதிகரித் திருந்தது. அப்போது ஈராக் தினாரின் பெறுமதி அமெரிக்க டொலருக் குச் சமமாக இருந்தது. ஈராக்கின் சபிக்கப்பட்ட நாளைய தலைமுறை இவற்றையெல்லாம் பழங்கதைகளாக மறந்து போகலாம்.

(பிற்குறிப்பு: இந்தக் கட்டுரை 2006ம் ஆண்டு வெளிவந்த
<http://www.uyirnizhal.com> பிரசுரமாகியது.
இத்தனை வருடங்களுக்குப் பின்னரும், ஈராக்கின் நிலை
அதிகளவு மாறவில்லை என்பதை
வாசகர்கள் புரிந்து கொண்டிருப்பார்கள்.)

★★★

அமெரிக்கா குடிக்க முடியாத
எண்ணெய்க் கிணறாய்
கொப்பளிக்கிறது
ஈராக்கின் விடுதலை உணர்ச்சி...

திரும்பியப் பக்கமெல்லாம்
தீக்காயம் பட்டு
மெசொப்பொத்தாமியா நாகரிகத்தின்
மனித உணர்ச்சியை
அறிந்துகொண்..டி..ருக்கிறது அமெரிக்கா...

அமெரிக்கத் திருடனின் கனவுகள்
விழிபிதுங்கி நிற்கிறது ஈராக்கில்...

எப்படி?... ஏன்?..
ஒரு கண்ணோட்டத்தை வழங்குகிறது
இந்தச் சிறிய நூல்.

கீழைக்காற்று